பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
03 11 2025 MONDAY   12 40 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அறிவியல் ஆராய்ச்சிக்கு போதிய நிதி அளிப்பதற்கும். விஞ்ஞானிகளுக்கு வாய்ப்பளிப்பதற்கும் மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மத்திய – மாநில அரசுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

- தேர்தல் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்தை அனைத்துக் கட்சிகளும் வரவேற்று ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்

- தெலங்கானா மாநிலம், Chevella அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் 19 பேர் உயிரிழந்தனர்.

- தைவான் நாட்டை சீனா ஆக்கிரமித்தால், அதற்கான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

>>>>>><<<<<

அறிவியல் ஆராய்ச்சிக்கு போதிய நிதி அளிப்பதற்கும். விஞ்ஞானிகளுக்கு வாய்ப்பளிப்பதற்கும் மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான மாநாட்டில் உரையாற்றிய அவர். ஆராய்ச்சிக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் உகந்த சூழலை இந்தியா உருவாக்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

நாட்டில் பெண்கள் அறிவியல் தொழில்நுட்பத்துறையில் இணைந்து வருவதில் பெருமிதம் கொள்வதாக பிரதமர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், நாட்டின் அறிவியல் ஆராய்ச்சி மேம்பாட்டிற்காக ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஆராய்ச்சி வளர்ச்சி மற்றும் புதிய கண்டுப்பிடிப்புகளுக்கான நிதியத்தையும் திரு. நரேந்திர மோடி அறிவித்தார்

>>>>>><<<<<

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மத்திய - மாநில அரசுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் அமைக்கப்பட்டதன் 25-வது ஆண்டு நிறைவையொட்டி, அம்மாநில சட்டப்பேரவையில் இன்று உரையாற்றிய அவர், நாட்டிலேயே முதன்மை மாநிலமாக உத்ராகண்டை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

மத்திய – மாநில அரசுகள் இணைந்து, திட்டங்களை செயல்படுத்தி இம்மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

>>>>>><<<<<

தேர்தல் ஆணையத்தின் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் மூலம் போலியான வாக்காளர்கள், இரட்டை வாக்காளர்கள், இறந்து போனவர்கள் தொடர்பான விவரங்களை கண்டறிந்து, பட்டியலை சீரமைக்க முடியும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம், காலத்தின் கட்டாயம் என்றும், இதை அனைத்து கட்சிகளும் வரவேற்று, முழுமையாக பங்கேற்று தேர்தல் ஆணையத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் – எல். முருகன் 60 செகண்ட்ஸ்)

சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் மூலம், பீகாரில் 6 லட்சம் போலி வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின் போது, வாக்காளர்கள் அனைவரும் தங்களது விவரங்களை தவறாமல் சரிபார்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தமிழக அரசுக்கு எதிரான ஊழல் புகார்களை திசை திருப்புவதற்காகவே, திமுக கூட்டணிக் கட்சிகள் சிறப்பு வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தப் பணிகளை எதிர்ப்பதாக டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டினார்.

தேர்தலை நியாயமான முறையில் நடத்துவதற்கு வாக்காளர் பட்யடில் திருத்தம் அவசியம் என்று கூறிய அமைச்சர், இந்த சிறப்பு திருத்தத்திற்கு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இரண்டு நாள் பயணமாக இன்று கேரளா செல்கிறார்.

அம்மாநிலத்தில் உள்ள கொல்லம், தனியார் கல்லூரியில் இன்று நடைபெறவுள்ள பொன்விழா கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு அவர் உரையாற்றுகிறார்.

பின்னர், இந்திய கயிறு ஏற்றுமதி சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ள மாநாட்டில் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு பேசவுள்ளார்.

>>>>>><<<<<

தெலங்கானா மாநிலம், ரங்காரெட்டி மாவட்டத்திற்குட்பட்ட Chevella அருகே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து, டிப்பர் லாரியுடன் இன்று மோதி ஏற்பட்ட விபத்தில் 19 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த 20 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்திற்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

>>>>>><<<<<

பீகார் சட்டப்பேரவைக்கு வரும் 6ஆம் தேதி நடைபெறவுள்ள முதல்கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலை நிறைவடையவுள்ள நிலையில், அரசியல் கட்சி தலைவர்களின் வாக்கு சேகரிப்பு தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, அம்மாநிலத்தில் உள்ள Saharsa, Katahar உள்ளிட்ட பகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி Saharsa-பகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடவுள்ளார்.

>>>>>><<<<<

இந்தியா-பஹ்ரைன் கூட்டுக் குழுவின் 5வது கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பஹ்ரைன் வெளியுறவு அமைச்சர் அப்துல் லத்தீஃப் பின் ரஷீத் அல்-ஸயானி ஆகியோர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இருநாட்டு உறவுகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

>>>>>><<<<<

எல்லைதாண்டி மீன் பிடித்ததாக 35 மீனவர்களை இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்தனர்.

தமிழகம் மற்றும் காரைக்கால் மீன்பிடி துறைமுகங்களிலிருந்து நாட்டுப் படகு மற்றும் விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் இலங்கை, காங்கேசன் கடற்படை முகாமிற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

விசாரணைக்குப் பின்னர் அவர்கள், யாழ்ப்பாணத்தில் உள்ள மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் வைக்கப்படுவார்கள் என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

தைவான் நாட்டை சீனா ஆக்கிரமித்தால், அதற்கான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

சீன அதிபர் திரு. Xi Jin Ping-ஐ கடந்த வாரம் சந்தித்த பின், தொலைக்காட்சியில் நேர்காணல் ஒன்றில் பங்கேற்ற அவர், இதனை தெரிவித்தார்.

இருப்பினும், இந்த பேச்சுவார்த்தையில், தைவான் பிரச்சினை குறித்து இடம்பெறவில்லை என்றும் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

வரும் 2027ஆம் ஆண்டுக்குள் தைவான் நாட்டை ஆக்கிரமிக்க சீன ராணுவத்திற்கு அதிபர் திரு. Xi Jin Ping உத்தரவிட்டுள்ளதாக அமெரிக்க உளவுத்தறை கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

>>>>>><<<<<

குருநானக்கின் 556-வது ஜெயந்தி விழா, நாளை மறுநாள் கொண்டாடப்படுவதை ஒட்டி, வாஹா எல்லைப்பகுதி வழியாக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சீக்கியர்கள் பாகிஸ்தானின் லாகூர் சென்று வழிபடவுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

லாகூரில் குருநானக் பிறந்த ஊருக்கு அருகேயுள்ள குருத்வாரா ஜென்மஸ்தான் Nankana Sahib-ல் முக்கிய விழா நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி, இரண்டாயிரத்து 150 விசாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

*சீனா, அமெரிக்கா உள்ளிட்ட 11 நாடுகளிலிருந்து தூதர்களை திரும்பப் பெறுவதற்கான நேபாள அரசின் முடிவுக்கு, அந்நாட்டு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.*

*கடந்த மாதம் சீனா, அமெரிக்க, பிரிட்டன், ஜெர்மனி, இஸ்ரேல், மலேசியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கான தூதர்களை திரும்பப் பெற நேபாள அமைச்சகம் முடிவு எடுத்திருந்தது.*

*இதுதொடர்பான மனுவை விசாரித்த நீதிபதிகள் Sharanga, Srikantha ஆகியோர் அடங்கிய அமர்வு, அரசின் நடவடிக்கைக்கு தடை விதித்து உத்தரவிட்டது.*

*>>>>>><<<<<*

*ஆப்கானிஸ்தானின் இந்துகுஷ் மலைப்பகுதியில் நேற்று நள்ளிரவு ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.*

*ஆப்கான் Kholm பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோளில் 6 புள்ளி மூன்றாக பதிவாகியுள்ளது.*

*இந்த நிலநடுக்கத்தால் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாக ஆப்கான் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் கூறியுள்ளது.*

*இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள், உஸ்பெகிஸ்தான், தஜுகிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட அண்டை நாடுகளிலும் உணரப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.*

*>>>>>><<<<<*